பல்கேரியா



# இறுதியாகக் கிடைத்த கட்டிட அனுமதி

*“எங்களுடைய 25 ஆண்டு கால ஜெபத்திற்கு பதில் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறோம்.”*

பல்கேரியாவில் எந்த வகையான கட்டிடத்தை கட்ட வேண்டுமானாலும், கட்டிட அனுமதி தேவை.

கட்டிட அனுமதியை நகர நிர்வாகம் வழங்குகிறது.

செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை அந்நாட்டின் தலைநகரான சோபியாவில் ஒரு பெரிய ஆலயத்தைத் திறக்க திட்டமிட்டது. அதனால் அதற்கு நகரத்தின் தலைமை கட்டிடக் கலைஞரால் கையெழுத்திடப்பட்ட ஒரு கட்டிட அனுமதி தேவைப்பட்டது.

அந்தக் கையெழுத்தைப் பெறுவதற்கு, தலைமை கட்டிடக் கலைஞரை நேரில் சந்திப்பதற்கு, அவரிடம் நேரம் ஒதுக்கிக் கேட்கவேண்டும். ஆனால் அவர் எல்லா நாட்களிலும் வரமாட்டார். அவர் மாதத்திற்கு ஒரு நாள் மதியம்மட்டுமே கட்டிட அனுமதிகளில் கையெழுத்திட தன் அலுவலகத்திற்கு வருவார்.

மேலும், சந்திப்பு நேரங்களை தொலைபேசிமூலம் மட்டுமே பதிவு செய்யமுடியும். நேரில் வந்து பதிவு செய்ய அனுமதி இல்லை.

பல்கேரியாவில் உள்ள செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் அலுவலகச் செயலாளரான இவா என்பவர் இதற்கு பொறுப்பேற்றிருந்தார். அவர் சந்திப்பு நேரத்தை ஒதுக்கும்படி கேட்பதற்கு தலைமை கட்டிடக் கலைஞரின் செயலாளரை அழைத்துப்பேசவேண்டும்.

அந்த வேலை எளிதாக இருக்கவில்லை. முதல் மாதத்தில் அழைத்தபோது, தொலைபேசி இணைப்பு தொடர்ந்து வேறொரு இணைப்பில் இருந்தது. இரண்டாவது மாதத்தில், இணைப்பு கிடைத்தது, ஆனா

லும் யாரும் தொலைபேசியை எடுக்க வில்லை. மூன்றாவது மற்றும் நான்காவது மாதங்களில், அது மீண்டும் வேறொரு இணைப்பிலேயே இருந்தது.

இறுதியாக, பல்கேரியாவில் உள்ள அட்வென்டிஸ்ட் சபையின் தலைவர், நிலைமையை நேரில் விளக்குவதற்காக தலைமை கட்டிடக்கலைஞரின் அலுவலகத்திற்குச் சென்றார்.

“இங்கு நேரில் வந்து சந்திப்பு நேரத்தை ஒதுக்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யமுடியாது. நீங்கள் தொலைபேசியில்தான் தொடர்பு கொள்ளவேண்டும்” என்று செயலாளர் சொன்னார்.

எனவே, அந்தத் தலைவர் தலைமை கட்டிடக் கலைஞரின் அலுவலகத்திலிருந்து இவாவை அழைத்து, “நான் அலுவலகத்தில்தான் இருக்கிறேன். தயவுசெய்து இப்போது அவருடைய செயலாளரை அழையுங்கள்” என்றார்.

இவா தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருந்தார், ஆனால் யாரும் தொலைபேசியை எடுக்கவில்லை. மணி அடித்துக்கொண்டே இருந்தது. தலைவருக்கு அழைப்பு மணி சத்தம் கேட்டது. செயலாளருக்கும் கேட்டது. ஆனால் யாரும் தொலைபேசியை எடுக்கவில்லை.

ஏமாற்றமடைந்த இவா, தலைவரை அழைத்து, “தயவுசெய்து நீங்களே அவளை அழையுங்கள்” என்றார்.

எனவே, அவரும் அப்படியே செய்தார். அந்தச் செயலாளருக்கு நேர் முன்னால் நின்றுகொண்டே, அவர் அந்தப் பெண் செயலாளருடைய அலுவலக எண்ணிற்கு அழைத்தார், ஆனால் அந்தப் பெண்ணோ தொலைபேசியை எடுக்கவில்லை.

அப்போதுதான், யாரோ ஒருவர் தங்களுடைய நிலத்தை வாங்க விரும்புகிறாரோ என்று அட்வென்டிஸ்டுகள் சந்தேகிக்கத் தொடங்கினர். சோபியா வெஸ்ட் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபைக்காக அவர்கள் வாங்கிய சொத்து மிகவும் விலைமதிப்புமிக்க ஓர் இடமாகும். அது ஒரு சுரங்கப்பாதை நிலையத்தின் நுழைவாயிலுக்கு மிக அருகில் இருந்தது. கட்டப்படவிருந்த ஆலயத்தின் ஒரு பக்கத்தில் ஒரு பெரிய வணிக வளாகமும், மறுபக்கத்தில் மின்போக்குவரத்து பாதையும் இருந்தன. அட்வென்டிஸ்டுகள் சோர்ந்து போய் நிலத்தைக் குறைந்த விலைக்கு விற்றுவிடுவார்கள் என்று யாரோ எதிர்பார்த்திருக்கலாம்.

அட்வென்டிஸ்டுகள் தங்களது ஆலயக் கட்டிடத்திற்காக ஊக்கத்துடன் ஜெபிக்கத் தொடங்கினர். 25 ஆண்டுகள் ஜெபித்தார்கள். இறுதியாக, சோபியாவில் புதிதாக ஒரு தலைமை கட்டிடக்கலைஞர் பதவிக்கு வந்தார். அவர் நீண்ட நாட்களாக கிடப்பிலிருந்த கட்டிட அனுமதியில் கையெழுத்திட்டார். ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் அக்டோபர் 2024 இல் தொடங்கின. இந்தப் பணிக்கு காலாண்டு ஊழியத் திட்ட காணிக்கை என்று அழைக்கப்படும் பதின்மூன்றாம் வார ஓய்வு நாள் காணிக்கையின் ஒரு பகுதி பயன்பட்டது.

“எங்களுடைய 25 ஆண்டு

கால ஜெபத்திற்கு பதில் கிடைத்த தில் மகிழ்ச்சியடைகிறோம்'' என்று தேவாலயத்தின் தலைமை மூப்ப ரான மரியன் கூறினார். 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தாராள மாக காணிக்கை வழங்கிய உலகெங் கிலும் உள்ள விசுவாசிகளின் ஆதர வால், சோபியா வெஸ்ட் செவந்த் -டே அட்வெண்டிஸ்ட் ஆலயம் தற் போது கட்டப்பட்டு வருகிறது. இந் தக் காலாண்டில், பல்கேரியாவில் இயேசுவின் சீக்கிரமான வருகை பற்றிய நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் உதவலாம். இந் தத் காலாண்டு காணிக்கையின் ஒரு பகுதி, 'கலர்ஃபுல் ஹோப்' என்று அழைக்கப்படும் செவந்த்-டே அட் வென்டிஸ்ட் மழலையர் பள்ளியா னது, வாடகை இடத்திலிருந்து சோ ஃபியாவில் உள்ள அதன் சொந்தக் கட்டிடத்திற்கு மாறுவதற்கு உதவி யாக இருக்கும். நீங்கள் தாராளமாக காணிக்கை கொடுப்பதற்கு மிக்க நன்றி.

## கதைக் குறிப்புகள்

- பல்கேரியாவை ஒரு வரைபடத்தில் காட்டுங்கள். பின்னர், சோஃபியா வெஸ்ட் செ வன்த்–டே அட்வென்டிஸ்ட் ஆலய நிலமும் மற்றும் 'கலர்ஃபுல் ஹோப்' பள்ளியும் அமைந்துள்ள அதன் தலைநகரமான சோஃபியாவைச் சுட்டிக்காட்டுங்கள்
- மரியனின் சிறிய வீடியோவைப் பார்க்கவும்***: bit.ly/Marian-EUD.***
- அட்வென்டிஸ்ட் சபை இந்த நிலத்தை 2000 ஆம் ஆண்டில் வாங்கியது, ஆனால் அக் டோபர் 2024 வரை எந்த முன்னேற்றமும் இல்லாமல் பணிகள் முடங்கிக் கிடந்தன. அந்த நேரத்தில், அந்த சபையினர் பல்வேறு வாடகை இடங்களில் கூடி ஆராதனை செய்தனர். சில காலம், அவர்கள் மற்றொரு அட்வென்டிஸ்ட் சபையில், மாறி மாறி ஆரா தனைகளை நடத்தி வந்தார்கள். பின்னர், அவர்கள் ஒரு சமூக மையத்தின் இரண்டா வது மாடியில் ஆராதனைகளை நடத்தினார்கள். அங்கு வருபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தது; இதில் 40 குழந்தைகளும் அடங்குவர். இறுதியாக வார நாட் களில் உணவு மற்றும் ஆடைகள் வழங்கும் சேவைகள் மூலம் சமூகத்திற்கு உதவவும், ஆராதனை செய்யவும் ஒரு பெரிய இடம் கிடைத்ததால் அந்தச் சபையினர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.
- 1890களின் தொடக்கத்தில், ரஷ்யாவில் இருந்த ஜெர்மன் குடியிருப்புகளில் இருந்து வெளியேறி, பல்கேரிய எல்லையருகே ருமேனியாவில் குடியேறிய ஜெர்மன் அட்வென் டிஸ்டுகளின்குழு ஒன்று, தங்களது நம்பிக்கைகளை தங்களுக்குப் பக்கத்து வீட்டில் இருந்த ருமேனிய மற்றும் பல்கேரிய மக்களிடையே பரப்பியது.
- எலன் ஜி. ஒய்ட் எழுதிய கிறிஸ்துவிடம் செல்லும் வழி என்ற புத்தகம்தான் 1899 ஆம் ஆண்டில்பல்கேரிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, பல்கேரியாவில் வெளியிடப்பட்ட முதல் அட்வென்டிஸ்ட் புத்தகமாகும்.
- 1911 இல், ஜெர்மனியைச் சேர்ந்த போதகரான சி. மோட்சர் என்பவர் பல்கேரிய ஊழியக் களத்தை அமைத்தார். 1912 ஆம் ஆண்டிற்குள், சோஃபியாவில் எட்டு உறுப்பினர் களைக் கொண்ட ஒரு சபை உருவாக்கப்பட்டது. செவன்த்–டே அட்வென்டிஸ்ட் சபைக்கு 1990 ஆம் ஆண்டு வரை பல்கேரிய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்படவில்லை.